# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1997 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகை (திருத்தச்) சட்டம்

---

*(1997 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1997, திசெம்பர் மாதம் 26 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி** II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 2.50**

## 1997 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நாடுகாக்கும் உதவுதொகை (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. – ஓ 38/97

## 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவு தொகைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம், 1997 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகைச் சட்டத்தின் விரிவுப்பெயர், "முறையே 1996 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்றும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்றும் தொடங்கும் ஆண்டுகளின் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1996, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு ஆண்டினதும் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்து தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "முறையே 1996 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்றும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்றும் தொடங்கும் ஆண்டுகளின்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1996 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டினதும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு ஆண்டினதும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படு பட்சத்தில் சிங்கள உரை மேலோங்க நிற்றல்.

2 – ட 047233 – 1,150 (97/12)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா: (உள்நாட்டு) ரூபா 1,387; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.